**ஒதுக்கீட்டு தலைப்பு - 264- மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012**

## 1.1 மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

(i) மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வழிநடத்தல்.

(ii) மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் செயலாற்றலை முன்னேற்றுதல்.

(iii) கிராம மற்றும் பிரதேச மட்டங்களில் அலுவலகங்கள் மற்றும் அமைப்புகள் ஊடாக சட்டப்படி கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றல்.

(iv) வருமானத்தை சேகரிப்பதற்கு வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் முகவராகச் செயற்படுதல்.

(v) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல்.

(vi) மாகாண சபைகளில் அதன் நடவடிக்கைகளிற்கு உதவிபுரிதல்.

(vii) உள்ளூராட்சி மட்டத்தில் ஆளுமையின் தரத்தை மேம்படுத்துவதற்காக மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளில் மனித வளங்களின் அபிவிருத்தியும் முன்னேற்றமும்.

(viii) தேசிய கொள்கை வடிவமைப்பிற்குள் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அரசாங்கம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(ix) தேவையான வழிகாட்டல் மற்றும் மேற்பார்வைகளை வழங்குவதனூடாக மகாணசபைகள் மூலம் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் அமுலாக்கலை உறுதிப்படுத்தல்.

(x) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு உதவிபுரிதல்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) யாழ்ப்பாணம்
(ஆ) வேலனை
(இ) வலிகாமம் கிழக்கு
(ஈ) வலிகாமம் வடக்கு
(உ) வலிகாமம் மேற்கு
(ஊ) வலிகாமம் தெற்கு
(எ) வடமராட்சி தென் மேற்கு
(எ) வடமராட்சி வடக்கு
(ஐ) தென்மராட்சி
(ஒ) நல்லூர்
(ஓ) வலிகாமம் தென் மேற்கு
(எ) வடமராட்சி கிழக்கு
(ஏ) நெடுந்தீவு
(ஐ) காரைநகர்
(ஒ) ஊர்காவற்றுறை

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய வருமானக் கணக்குகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச்

சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (ஊ) வரையான பொது அவதானிப்புக்களையும் 1.6 இலிருந்து 1.14 வரையான பந்திகளில் காணப்படுகின்ற ஏனைய பிரதான கணக்காய்வு அவதான0ப்புக்களையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

(அ) ஏடுகள், புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணாமை

மாவட்ட செயலகம் பின்வரும் ஏடுகளைப் பேணியிருக்காத அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. என்பது கணக்காய்வு தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாண இல 214 | பேணப்பட்டிருக்கவில்லை |
| இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாண இலக்கங்கள் 110 மற்றும் 104 (3) மற்றும் (4) | முறைப்படியாகப் பேணப் பட்டிருக்கவில்லை |
| ஒதுக்கீட்டு (வாக்குப்பண) பேரேடு | நிதிப்பிரமாண இல 447 | முறைப்படியாகப் பேணப் பட்டிருக்கவில்லை |

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் செயற்படுகின்ற பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு ரூபா 530,504,383 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 525,187,938 பயன்படுத்தப்பட்டிருந்தது. எனவே மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் தேறிய சேமிப்பு ரூபா 1,234,231 முதல் ரூபா 4,082,214 அல்லது 0.25 சதவீதம் முதல் 9.41 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவின வகுதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதிஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| மீண்டுவரும் | 365,660,000 | 487,141,735 | 485,907,504 | 1,234,231 | 0.25 |
| மூலதனம் | 43,200,000 | 43,362,648 | 39,280,434 | 4,082,214 | 9.41 |
| மொத்தம் | **408,860,000** | **530,504,383** | **525,187,938** | **5,316,445** | **1.00** |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு நடவடிக்கைகளிற்காக 19 அமைச்சுக்கள் மற்றும் 10 திணைக்களங்களிடமிருந்து முறையே ரூபா 3,717.6 மில்லியன் மற்றும் ரூபா 371.6 மில்லியன் மொத்தமான ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்தது. அதில், முறையே ரூபா 332 மில்லியன் மற்றும் ரூபா 3,339.7 மில்லியன் உள்ளடங்க ரூபா 3671.7 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, ரூபா 46 மில்லியன் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) அரச செலவின முகாமைத்துவம்

2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் வழங்கப்பட்ட மீண்டெழும் செலவின ஏற்பாட்டில் 2 சதவீதம் சேமிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தால் 0.25 சதவீதம் மாத்திரமே சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) வருமானக் கணக்குகள்**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் 2012 ஆம் ஆண்டின் போது 06 வருமானக் குறியீடுகளிற்காக ரூபா 27.45 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் 11 வருமானக் குறியீடுகளிற்காக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதேநேரம் ரூபா 135.13 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தில், 93.29 சதவீதத்திற்கும் 252.50 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | (குறைவு)/ மேலதிகம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 2006.02.00 | 600,000 | 1,515,000 | 915,000 | 252.50 |
| 2003.99.00 | 16,000,000 | 27,696,987 | 11,696,987 | 173.11 |
| 2003.02.99 | 7,000,000 | 6,530,396 | (469,604) | 93.29 |
| 2002.02.99 | 3,500,000 | 4,036,198 | 536,198 | 115.32 |
| 2002.01.01 | மதிப்பிடப்படவில்லை | 4,900 | 4,900 | - |
| 1003.06.00 | மதிப்பிடப்படவில்லை | - | - | - |
| 1003.07.05 | 4,200 | 5,770 | 1,570 | 137.38 |
| 1002.07.00 | மதிப்பிடப்படவில்லை | - | - | - |
| 1003.07.02 | மதிப்பிடப்படவில்லை | 90,900 | 90,900 | - |
| 1003.07.03 | மதிப்பிடப்படவில்லை | 417,933 | 417,933 | - |
| 1003.07.04 | மதிப்பிடப்படவில்லை | - | - | - |
| 1003.07.99 | 350,000 | 399,760 | 49,760 | 114.22 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2002.01.02 | மதிப்பிடப்படவில்லை | 103,225 | 103,225 | - |
| 2003.02.07 | மதிப்பிடப்படவில்லை | 12,809,600 | 12,809,600 | - |
| 2003.02.13 | மதிப்பிடப்படவில்லை | 5,822,125 | 5,822,125 | - |
| 2003.02.14 | மதிப்பிடப்படவில்லை | 60,802,843 | 60,802,843 | - |
| 2004.01.00 | மதிப்பிடப்படவில்லை | 14,897,085 | 14,897,085 | - |
| | **27,454,200** | **135,132,722** | | |

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கணக்கினக்கம்**

பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லை

26401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதிகள்** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ள படியானது** | **இழிவு எல்லை** | **உள்ள படியானது** | **உச்ச எல்லை** | **உள்ள படியானது** |
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 43,000,000 | 34,481,817 | 23,000,000 | 30,268,234 | 120,000,000 | 94,228,535 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இறந்த, ஓய்வுபெற்ற மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 277,697 தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1994 முதல் 1996 வரையான ஆண்டுகள் தொடர்பில் இணக்கக் கூற்றில் திணைக்களப் புத்தகத்திற்கும் திறைசேரி கணனி அச்சீட்டு தாளில் காட்டப்பட்ட தொகைக்கும் இடையில் காணப்படுகின்ற ரூபா 86,246 ஆன வித்தியாசத்தை திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1988 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 29/88 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 2,945,112 கூட்டு மொத்தத் தொகையான ஒரு ஆண்டு/ இரண்டு ஆண்டு கடன்களை மாவட்ட செயலகம் மற்றும்

பிரதேச செயலகங்கள் செலுத்தியிருந்தன. இது தொடர்பில் பாதுகாப்பு செயலாளரிடமிருந்தான அங்கீகாரம் ஒரு ஆண்டு/ இரண்டு ஆண்டு கடன்கள் கொடுப்பனவிற்காக பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) கட்டுநிதிக் கணக்கு

(i) நிதிப் பிரமாணம் 371 இன் ஏற்பாடுகளிற்கு முரணாக 52 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,987,974 மொத்தமான உப கட்டுநிதிகள் குறித்த நோக்கங்கள் முடிவடைந்த பின்னர் ஒரு மாதம் முதல் பதினொரு மாதங்களின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) நிதிப் பிரமாணம் 371 (2)(பீ) இன் பிரகாரம், ஒரு உத்தியோகத்தருக்கு ஒரே தடவையில் ரூபா 20,000 ஐ விஞ்சியாத உபகட்டுநிதிகள் வழங்க முடியும். எவ்வாறாயினும், நிதிப் பிரமாணத்திற்கு முரணாக ரூபா 5,083,236 தொகையான ரூபா 20,000 ஐ விஞ்சிய உப கட்டுநிதிகள் 48 சந்தர்ப்பங்களில் 92 உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தன.

(iii) சிறு செலவுக் கட்டுநிதி வழங்கல் ரூபா 7,500 இற்கு வரையறுக்கப்பட்டுள்ள போதிலும் திறசேரியின் அங்கீகாரம் இல்லாமல் ரூபா 10,000 பெறுமதியான காசுக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) பொது வைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 66,075,068 ஆனதுடன் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **கணக்கு இலக்கம்** | **2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **வரவுகள்** | **செலவுகள்** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 6003/0/0/40/0 | 112,741,312 | 408,216,701 | 361,550,457 | 66,075,068 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்டச் செயலக புத்தகங்களிற்கும் பொதுத் திறைசேரி கணனித் தாள்களிற்கும் இடையில் இறுதி மீதியில் ரூபா 22,046,383 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ii) வைப்புக் கணக்கின் ரூபா 3,030,586 தொகையான இனங்காணப்படாத மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் காலப் பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ரூபா 1,305,584 கூட்டு மொத்தத் தொகையான 06 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) ரூபா 7,577,117 கூட்டு மொத்தத் தொகையான ஒன்பது செயற்திட்ட நிதிகள் குறித்த நோக்கங்களிற்கு அவற்றினைப் பயன்படுத்தாமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(vi) ரூபா 21,793,511 தொகையான வீதி அனுமதிப்பத்திர சேகரிப்புகள் 2003 மே 07 ஆந்திகதிய என்ரீசீ/பீஓஎல்/98/22 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கடிதத்தின் பிரகாரம் வருமானக் கணக்கிற்கு அனுப்பப்படாமல் ரூபா 4,237,327 ஆன செலவினை செய்த பின்னர் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(vii) ரூபா 12,013,517 ஆன மணல் அனுமதிப்பத்திரங்களின் சேகரிப்பு 2009 ஆம் ஆண்டிலிருந்து பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இந்த வைப்பிலிருந்து பொது திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் பெறாமலும் மீளாய்வாண்டின் போது மதிப்பீடு/ ஏற்பாடு இல்லாமலும் பல்வேறு மூலதன செலவினங்கள் மற்றும் சம்பள கொடுப்பனவுகளிற்காக ரூபா 2,047,410 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ix) ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கான அங்கீகரிக்கப்பட்ட திட்டமில்லாமல் முன்னாள் மாவட்டச் செயலாளர் உள்ளடங்கலாக 24 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 3.425 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான ஊக்குவிப்புப்படி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் பாதீட்டு ஒதுக்கீடு இல்லாமல் வைப்புக் கணக்கில் இருந்த பல்வேறு சேகரிப்புக்களிலிருந்து இந்த கொடுப்பனவுகள் தனியார் பயணிகள் கப்பல் சேவைகளின் வேலைகள் தொடர்பான கொடுப்பனவுகளாக செய்யப்பட்டது. எவ்வாறாயினும், பயணிகள் கப்பல் சேவைகள் 2009 இல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது தனியார் பயணிகள் கப்பல் தொடர்பான விசேட வேலைகள் எந்தவொரு உத்தியோகத்தராலும் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் அந்த

வேலைகள் தொடர்பான கொடுப்பனவுகள் சம்பளங்களிற்கு மேலதிகமாக ஒரு நாளிற்கு ரூபா 500 வீதம் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய படிகளிற்கு மேலதிகமாக ஏற்கனவே செய்யப்பட்டிருந்தது.

## 1.6 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சு செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தலைவர்கள் என்போருக்கு முகவரியிடப்பட்ட அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க கடிதத்தின்படி 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆகக்குறைந்தது அடுத்துவரும் 3 ஆண்டுகளிற்காக ஆண்டு தொடக்கத்தில் மாவட்ட செயலகத்தால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மேற்குறிப்பிட்ட திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்குறிப்பிட்டபட்ட பந்தி (1.6.1) குறிப்பிடப்டட்ட அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந்திகதிய முறையே அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கங்கள் 402 மற்றும் 402(1) என்பவற்றின்படி நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் மாவட்ட செயலாகத்தால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 செப்தெம்பர் 30 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 வருடாந்த கொன்வனவுத் திட்டம்

(i) 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி ஆண்டின் தொடக்கத்தில் 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கேள்வி ஆவணங்கள் மற்றும் கேள்வியாளர் ஆவணங்களின் முற்தகைமைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கேள்வி திறத்தல் குழு, கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு என்பன கூட்டக்குறிப்புகளை கொள்வனவு வழிகாட்டல் கையேட்டின் 2:11:3 ஆம் வழிகாட்டலில் தரப்பட்ட குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிந்திருக்கவில்லை.

(iv) கொள்வனவு வழிகாட்டலின் 5:3:20(9) ஆம் பிரிவின்படி மாவட்ட செயலாளரால் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) கொள்வனவு வழிகாட்டலின் 5:4:10 ஆம் பிரிவின்படி மாவட்ட செயலாளரால் வழங்குனர்களிடமிருந்து செயலாற்றல் உத்தரவாதம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 உள்ளகக் கணக்காய்வு

சகல பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தின் நடவடிக்கைகளை மேவுவதற்கு உள்ளகக் கணக்காய்வு பிரிவு உத்தியோகத்தர்களின் பலம் போதியதாக இருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

2000 யூன் 12 ஆந்திகதிய ஐஏஐ/2000/01 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி, நான்கு கூட்டங்களிற்குப் பதிலாக யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவின் இரண்டு கூட்டங்களை மாத்திரமே நடாத்தியிருந்தது.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ஒரு ஆண்டு முதல் எட்டு ஆண்டுகளாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் 04 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 99 ஏனைய சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தியிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### (ஆ) வருடாந்த கணிப்பீட்டுச் சபை நடாத்ததல்

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் வருடாந்த கணிப்பீட்டுச் சபை நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந் கணிப்பீட்டுச் சபை

அறிக்கைகள் நான்கு மாதங்கள் கடந்த பின்னரும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் ஒரு ஆண்டினைவிட குறைவான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 1,215,477 ஆகும்.

## 1.8 இணக்கமின்மை

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| i | நிதிப்பிரமாணங்கள் | |
| | இல. 134 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒத்திசைவுடன் மாவட்ட செயலகத்தால் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 237(அ) | திருப்திகரமாக வேலை பூர்த்தியாக்கலிற்காக விசேட சான்றிதழ் பெறாமல் ஆண்டின் போது நிர்மாண வேலைகளுக்கான பகுதிக் கொடுப்பனவுகளின் கீழ் மாவட்ட செயலகத்தால் ரூபா 13,676,130 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| | இல. 756 மற்றும் 1647(ஆ) | மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ள வேண்டிய போதிலும் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக அத்தகைய மெய்மையாய்வு மேற்கொள்ளப் |

| | |
|---|---|
| | பட்டிருக்கவில்லை. |
| இல. 1645 | பிரதேச செயலகங்களால் சம்பவக்குறிப்பு புத்தகங்கள் முறைப்படியாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| இல. 1647 | வாகனங்களின் சகல விபரங்களையும் கொண்டிருக்கின்ற பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் பிரதேச செயலகங்கள் வாகனங்கள் தொடர்பில் எந்தவொரு பதிவேட்டினையும் பேணியிருக்காததுடன் கோவைகளில் வாகனங்களின் விபரங்களும் கிடைத்திருக்கவில்லை. |

(ii) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| 1992 ஆகஸ்ட் 19 ஆந்திகதிய 26/92 ஆம் இலக்கம் | அரசாங்க வாகனங்கள் அத்தகைய மோட்டார் வாகனங்களின் மேல் அரச முத்திரை பொறிக்க வேண்டும். எவ்வாறாயினும், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் சகல மோட்டார் வாகனங்கள் தொடர்பிலும் இவ் வேண்டுகையை பின்பற்றுவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயலாற்றல்கள்

ஆ
ட
.
ப
த
?
வு

திணைக்களத்தின் செயலாற்றல் மீதான அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

மீளாய்வாண்டின் போது 29,521 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் 979 விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. 28,542 பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களில் விண்ணப்பதாரிகளிற்கு விநியோகிக்கப்பட்ட தேசிய அடையான அட்டைகளின் விபரங்கள் மாவட்ட செயலகத்தில் கிடைத்திருக்கவில்லை.

## 1.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) போதிய ஆதாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் 2012 சனவரி 16 ஆந் திகதிய 2012/01 ஆம் சுற்றறிக்கைக்கு முரணாக ஆரம்ப பாடசாலை சிறுவர்களிற்கு 150 மி.லீ பால் வழங்குவதற்கு பசும் பாலிற்குப் பதிலாக பால் பவுடர் கொள்வனவு செய்வதற்காக ரூபா 316,560 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

## 1.11. நட்டங்களும் சேதங்களும்

விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமல் ரூபா 4,522,321 தொகையான இழப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

**1.12. ஏல விற்பனைகள்**

அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட வாகனம் ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் மோட்டார் வாகனம் ரூபா 600,000 மதிப்பீட்டு பெறுமதிக்கு மேலாக ரூபா 1,515,000 இற்கு ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353/5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுமதியிடல் செய்யப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

**1.13. வாகனங்களின் பாவனை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i). மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் முறைப்படியாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii). 2,657 கி.லோமீற்றர்கள் பயணம் செய்வதற்காக 15 உத்தியோகபூர்வ மோட்டார் வாகனங்களை பயன்படுத்திய உத்தியோகத்தர்கள் உரிய நாளாந்த ஓட்ட அட்டவணையில் கையொப்பமிட்டிருக்கவில்லை.

**1.14. மனிதவளங்கள் முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 63 | 45 | 18 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 59 | 19 | 40 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1,115 | 740 | 375 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப மட்டம் | 279 | 193 | 86 |
| | | ------------ | --------------- | -------------- |
| | மொத்தம் | 1,516 | 997 | 519 |
| | | ===== | ====== | ===== |

*M*